



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு மேற்கு ஒன்றியம் மற்றும் ஒடுக்கத்தூர் பேரூர் தி.மு.க. சார்பில் பாக குழு உறுப்பினர்கள் பி.எல்.சி. கூட்டம் அணைக்கட்டு மேற்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேலூர் மாவட்ட தி.மு.க.செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, தலைமை கழக தொகுதி பார்வையாளர் மதுசூதன் ஆகியோர் கலந்துகொண்டு கூட்டத்தின் நோக்கம் குறித்து சிறப்புரையாற்றினார்கள். முன்னதாக ஒடுக்கத்தூர் பேரூர் செயலாளர் பெருமாள்ராஜா வரவேற்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர்கள் பி.வெங்கடேசன், ஜி.குமரபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் சி.மணிமாறன், ஒன்றிய குழு தலைவர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை உரை ஆற்றினார்கள்.

# முதலமைச்சரின் "நீர்நிலைப் பாதுகாவலர் விருது" - விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

*சென்னை, ஜன.4-*

*முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தமிழ்நாடு அரசு செய்தி வெளியிட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழலையும் சூழல் அமைப்புகளையும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இச்சூழல் அமைப்புகளுக்கு மூலாதாரமாக விளங்குவது நீர் நிலைகளாகும். எனவே, இச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்துப் பேணிடவும், மாநிலத்தின் நீர் வளத்தைப் பெருக்கிடவும் அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள நீர் நிலைகளைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் செயல்பாட்டாளர்களான பொதுமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகளைப் போற்றி கவுரவிக்கவும், நீர் நிலைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்திடவும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒருவர் என 38 பேருக்கு "முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர்" விருதும், ரூ. 1 இலட்சம் ரொக்கப் பரிசும் வழங்கப்படும் என சட்டப்பேரவையில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.*

*அதன்படி இந்த ஆண்டிற்கான விருதுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. எனவே, இந்த விருதிற்கு விண்ணப்பிக்க விருப்ப முள்ளவர்கள் "தமிழ்நாடு விருதுகள் (TN Awards)" (http://awards.tn.gov.in) வலைதளம் மூலம் வருகின்ற 02.01.2025 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 17.01.2025 ஆகும்.*

*இவ்விருது குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் http://www.environment.tn.gov.in/ மற்றும் https://tnclimatechangemission.in/home/ ஆகிய வலைதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

- *விண்ணப்பிக்கக்கூடிய நபர்கள் எந்த மாவட்டத்தில் அதிகபட்ச பணிகளை செயல்படுத்தியுள்ளனரோ, அம்மாவட்டத்தினைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.*
- *ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறு விண்ணப்பிக்கப்படும் பட்சத்தில், ஒரு மாவட்டத்தின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.*
- *"தமிழ்நாடு விருதுகள் (TN Awards)" (http://awards.tn.gov.in) இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பங்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.*
- *தேர்வுக் குழுவினரின் முடிவே இறுதியானது.*

*இவ்விருது குறித்த மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

*இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, எண்1, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.*

*தொலைபேசி எண்: 044 - 24336421*

*மின்னஞ்சல் முகவரி: tnclimatechangemission@gmail.com*

*வலைதளம்: http://www.environment.tn.gov.in/ மற்றும் https://tnclimatechangemission.in/*

## நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் -

# கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!



*நாமக்கல், ஜன. 4-*

*நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகம் திறப்புவிழா வருகின்ற 06.01.2025 காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில், குமார பாளையம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் அவர்களின் முன்னிலையில், இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடி ராஜா, கதிரவன், ஜெகதீஸ்குமார், கார்த்தி கேயன், முரளி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள திறப்புவிழாவில் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## கேல் ரத்னா-அர்ஜுனா விருதுகளுக்குத் தேர்வான

# தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.4 -

விளையாட்டுத்துறையில் நாட்டின் உயரிய விருதுகளான கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு

**நமது உலக செஸ் சாம்பியன் டி. குகேஷ் அவர்கள் விளையாட்டுத்துறையில் நாட்டின் உயரிய விருதான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா 2024–க்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதேபோல, இந்தியா சார்பில் பாரா லிம்பிக்ஸில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நம் தங்கைகள் துளசிமதி முருகேசன், நித்ய ஸ்ரீ சுமதி சிவன் மற்றும் மனிஷா ராமதாஸ் ஆகியோருக்கு மதிப்புமிக்க அர்ஜுனா விருது வழங்கப்பட உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.**

**இந்த சிறப்புக்குரிய விருதுகளை பெறவுள்ள நமது விளையாட்டு வீரர்–வீராங்கனையர், தொடர்ந்து வெற்றிகளை குவித்து, வாழ்க்கையில் மென்மேலும் உயரங்களை எட்டிட வாழ்த்தி மகிழ்கிறேன்.**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தி.மு.க.சட்டத் துறையின் தென் மண்டலத்திற்கு உட்பட்ட நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட,மாநகர வழக்கறிஞரணி ஆலோசனைக் கூட்டம் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி.வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான் மாநகர செயலாளர் சுப்பிரமணியன், சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகம்மது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மத்திய மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் காமினி தேவன் வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் மாநகர அமைப்பாளர் சுரேஷ்குமார்,கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர் தவசி ராஜன்,தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார் உள்பட வழக்கறிஞரணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் ஆலோசனைப்படி வருகின்ற ஜனவரி மாதம் 18ஆம் தேதி சென்னையில் நடைபெறுகின்ற மாநில மாநாட்டிற்கு நெல்லை கிழக்கு, மத்திய,மாவட்டம் மற்றும் மாநகர சார்பில் அதிக அளவில் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.

# தி.மு.க கூட்டங்கள்; மாலை நேர பல்கலைக்கழகங்கள்!

## வாசகர்கள் உடனான கலந்துரையாடலில் பேராசிரியர் ஜெயரஞ்சன் பேச்சு!





சென்னையில் நடைபெறும் 48 வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. 1.1.2025 அன்று பொருளாதார அறிஞரும் மாநில திட்டக்குழு துணைத் தலைவருமான பேராசிரியர் ஜெயரஞ்சன் பங்கேற்று வாசகர்களுடன் உரையாடினார்.

### அடுத்த தலைமுறை

அவர் பேசியதில் இருந்து "நமது கொள்கை சார்ந்த பயணத்திற்கு வரலாற்றை அறிந்து கொள்வதும் , அது தொடரான புத்தகங்களை வாசிப்பதும் அந்த புத்தகங்களைப் பரப்புவதும், விவாதிப்பதும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதும் அவசியமாகும்.

13 ஆண்டுகள் ஆட்சி அதிகாரம் இல்லை என்றாலும், திரும்பி ஆட்சி அதிகாரத்திற்கு திமுக வந்தது என்றால் அதற்கு காரணம் கொள்கை சார்ந்த பரப்புரைதான் . நம்மிடம் கொள்கை இருந்தது, கொள்கை சார்ந்த வரலாற்றை பேசிக்கொண்டே இருந்தோம். அப்படியான செயல்பாடுகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.

### கொள்கை சார்ந்த வரலாறு

எதிரிகள் எவ்வளவு முயன்றும் தமிழ்நாட்டு கட்டமைப்பை உடைக்க முடியாததற்கு காரணம் நாம் கொள்கை சார்ந்த அவ்வளவு வேலைகளை செய்து வைத்திருக்கிறோம். இந்த கட்டமைப்பை உடைப்பதற்கு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் . அந்தப் போராட்டத்தை முறியடிக்க வேண்டுமெனில் நாம் இன்னும் தீவிரமாக கொள்கை சார்ந்த வரலாற்றை பேச வேண்டும். அறிவு பூர்வமாக ,தர்க்கபூர்வமாக , கருத்துச் செறிவு கொண்டவர்களாக தயாராக வேண்டும்.

தி. மு. க. வின் தொடக்கக் காலத்தில் தேநீர்க் கடைக்காரர்கூட கருத்து செறிவோடு இருப்பார். விவாதிப்பார். அதனால்தான் தி. மு. க. வின் தெரு முனை கூட்டம் கூட மாலை நேரப் பல்கலைக்கழகம் என போற்றப்பட்டது. ஆனால் இன்று, அசராமல் பொய் சொல்லும் கூட்டம் உருவாகி இருக்கிறது. அவர்களுக்குப் புத்தக வாசிப்பு அறிவே கிடையாது.

அவர்களை முறியடிக்க வேண்டும் எனில், நூல்களை வாசித்து கொள்கைப் பிடிப்புக் கொண்டவர்களாக மாற வேண்டும்" என்றார்.

# சென்னையில் 48-வது புத்தகக் காட்சி, முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில் வாசகர்களுடன் திராவிட இயக்க ஆளுமை சந்திப்பு!

## 'வாசிப்பதும், வதந்திக்கு பதில் அளிப்பதும், எதிர்கால தலைமுறைக்கானது' வாசகர்கள் உடனான கலந்துரையாடலில் ராஜகம்பீரன் உரை வீச்சு!






சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. 31.12.2024 அன்று அரசியல் விமர்சகர் ராஜகம்பீரன் பங்கேற்று, வாசகர்களோடு உரையாடினார்.

### பொருளாதார வளர்ச்சி

அப்போது அவர் பேசியதாவது: கடந்த அரை நூற்றாண்டில் தமிழ்நாடு கண்டிருக்கிற வளர்ச்சியை, மாற்றத்தை உணர முடியாதவர்கள் அல்லது ஏற்க முடியாதவர்கள் வடமாநிலங்களுக்கு ஒருமுறையாவது பயணம் செய்துவிட்டு வர வேண்டும். என்னுடைய நண்பர் நேரடி அனுபவத்தில் சொன்ன கருத்து இது. கல்வியில், சுகாதார மேம்பாட்டில், பொருளாதார வளர்ச்சியில் சில மாநிலங்கள் நம்மை விட, சில பத்தாண்டுகள் பின்னோக்கி உள்ளன.

தமிழ்நாடு அடைந்த இந்த வளர்ச்சி என்பது திடீரென்று நடந்தது அல்ல. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியையும், அதிகாரத்தையும் பெற தந்தை பெரியாரும், திராவிட இயக்கமும் மேற்கொண்ட அறிவியக்கத்தின் விளைச்சல் இது. தி.மு.கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்ட -திட்டங்களினால் ஏற்பட்ட மாற்றம் இது.

### இன்றைய தலைமுறை

ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்புக்கு எதிராக, மாநில மாநில உரிமைகளை முன்னிறுத்தி பெரிய போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம். கடந்த கால உழைப்பை இன்றைய தலைமுறை அறிந்துகொள்ள வேண்டும், எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இரவும் பகலும் நம் மீது அவதூறு பரப்புவோருக்கு பதிலடியாக நம்முடைய வரலாற்றை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். காலையில் எழுந்தவுடன் நாம் மேற்கொள்ளும் அன்றாட கடமைகளுள் ஒன்றாக, இந்த இயக்கத்தின் மீது பரப்பப்படும் அவதூறுகளுக்கு பதிலடி சொல்வதையும் வழக்கமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக நாம் வாசிக்க வேண்டும். நம் தலைமுறைக்காக, நம் எதிர்கால தலைமுறைக்காக இந்த பணியை நாம் செய்தாக வேண்டும் என்றார்.

### திராவிட வாசிப்பு

அனைத்து சாதி அர்ச்சகர் சட்டம், சமத்துவபுரம், சாதி மறுப்புத் திருமண நிதியுதவித் திட்டம் என தி.மு.க. அரசால் இயற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து வாசகர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ராஜகம்பீரன் விரிவான பதில் அளித்தார். திராவிட வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு முத்தமிழறிஞர் பதிப்பகம் முன்னெடுக்கும் வாசகர் சந்திப்பை அர்த்தமுள்ளதாக்கியது இந்த நிகழ்வு.